15.05.2025 CC 49/2022 PW1. ஜோசப்ராஜ்

கடந்த 19.01.2024ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படாமல் இருந்த நிலையில் இந்நீதிமன்ற M.P.08/2025 dated 20.03.2025ன் படி கு.வி.மு.ச 1973பிரிவு 311ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் மேற்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு குறுக்கு விசாரணை

குற்றம் சுமத்தப்பட்டவர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்

1. எனக்கும் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் எவ்வளவு காலம் பழக்கம் என்றால், 2019லிருந்து பழக்கம் ஆகும். குற்றம் சுமத்தப்பட்ட நபரின் கல்வி நிறுவனத்திற்கு எனக்கு அடிக்கடி பழக்கம் உள்ளது என்றால், சரிதான். 2016 முதல் நான் குற்றம் சுமத்தப்பட்ட நபருடன் நல்ல பழக்கத்துடன் உள்ளேன் என்றால், சரியல்ல. மேற்படி சங்கதியை நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல.

2. குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு கொடுத்த ரூபாய் 7 லட்சம் தொகை என் வீட்டில் இருந்த தொகையா என்றால், சரிதான் எனது தொழிலில் இருந்து எடுத்துக் கொடுத்தப்பணம். எனது தொழில் சம்மந்தமாக கணக்கு வைத்துள்ளேனா என்றால், சரியல்ல. நான் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு கொடுத்த பணத்தை எனது தொழிலில் இருந்து எடுத்தேன் என்பதை நிரூபணம் செய்வதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால், அந்தத் தொகைக்கு என்னிடம் ஆவணம் இல்லை. ஆனால் நான் எனது தொழிலுக்கு வருமான வரி செலுத்தி வருகிறேன்.

3. எனது வருமான வரியில் நான் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு கொடுத்த தொகையை குறிப்பிட்டுள்ளேனா என்றால், இல்லை. நான் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு கடன் கொடுக்கும் வேறு நபர்கள் உடன் இருந்தார்களா என்றால், எனது நண்பர் அலெக்சாண்டர் இருந்தார். ஆனால் தற்பொழுது அவர் உயிருடன் இல்லை. நான் இவ்வழக்கிற்கு வழக்கறிவிப்பு அனுப்பும் போதும் வழக்கு தாக்கல் செய்த போதும் அலெக்சாண்டர் உயிருடன் இருந்தார் என்றால், சரிதான். தற்சமயம் சுமார் 8 மாதங்களுக்கு முன்பு தான் அவர் இறந்து விட்டார்.

4. எனது நண்பர் அலெக்சாண்டர் முன்னிலையில் தான் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு கடன் கொடுத்ததாக எனது வழக்கறிவிப்பிலோ இவ்வழக்கு ஆவணங்களிலோ குறிப்பிடவில்லை என்றால், சரிதான். குற்றம் சுமத்தப்பட்ட நபர் என்னிடம் கடன்

வாங்கியதற்கு கடனுறுதி சீட்டோ அல்லது வேறு ஆவணமோ எழுதிக் கொடுத்தாரா என்றால், ஒரு காசோலை மட்டும் கொடுத்தார். அந்த காசோலை எண் 0000037 ஆகும். குற்றம் சுமத்தப்பட்ட நபர் காசோலையை நிரப்பிக் கொடுத்தாரா என்றால், ஏற்கனவே நிரப்பி என் முன்னிலையில் கையெழுத்து போட்டுக் கொடுத்தார். மேற்படி சங்கதிகளை நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால், சரியல்ல.

5. என்னிடம் காட்டப்படும் Ex.P1 காசோலையில் கையெழுத்திற்கும் மற்ற விவரங்களுக்கும் உள்ள மையில் வித்தியாசம் உள்ளதா என்றால், அதைப்பற்றி எனக்குத் தெரியாது. தெரியாது என்று பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால், சரியல்ல. நான் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு கடன் கொடுத்த தொகையை காசோலை மூலம் கொடுக்கப்படவில்லை என்றால், சரிதான். அதனை நான் ரொக்கமாக தான் கொடுத்தேன்.

6. ரூபாய் 20 ஆயிரத்துக்கு மேற்பட்ட தொகையை ஒரு நபருக்கு கொடுக்க வேண்டும் என்றால், அது காசோலை மூலமோ அல்லது வங்கியின் மூலம் தான் கொடுக்க வேண்டும் என்ற விவரம் எனக்குத் தெரியுமா என்றால், தெரியாது. 20 ஆயிரம் ரூபாய்க்கு மேல் ரொக்கமாக கொடுக்கும் தொகை சட்டவிரோதமானது என்றால், அதைப்பற்றி எனக்குத் தெரியாது.

7. எனது வழக்கறிவிப்பில் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு கொடுத்த தொகை தொழிலில் இருந்து எடுத்துக் கொடுத்தேன் என்று சொல்லப்படவில்லை என்றாலும், அது ஏற்பாடு செய்து கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால், தொழிலில் இருந்து ஏற்பாடு செய்துக் கொடுத்ததாகும். முதன்முறை காசோலை வங்கியில் இருந்து திருப்பப்பட்ட போது நான் குற்றம் சுமத்தப்பட்ட நபரை அணுகி அதன்பிறகு அவர் திரும்ப வங்கியின் செலுத்துமாறு சொன்னது வழக்கிற்காக சொல்லப்படும் பொய் என்றால், சரியல்ல.

8. எனது புகார் மனுவில் பார்த்ததாக சொல்லும் சாட்சியை சாட்சி பட்டியலில் சேர்க்கவில்லை என்றால், அதைப்பற்றி எனக்குத் தெரியாது. நான் வழக்கறிவிப்பு அனுப்புவதற்கு வழக்கறிஞரிடம் கூறிய போது நான் பணம் கொடுக்கும் போது அலெக்சாண்டர் உடன் இருந்தார் என்ற விவரத்தை கூறினேன் என்றால், சரி தான். நான் வழக்கறிவிப்பை குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு அனுப்புவதற்கு முன்பு படித்து பார்த்தேனா என்றால், இல்லை.

9. புகார்மனுவை நான் படித்துப் பார்த்தேன் என்றால், சரிதான். புகார்மனுவை படித்துப் பார்த்த பின்னும் அலெக்சாண்டர் பெயர் விடப்பட்டுள்ளதால் அதனை சேர்ப்பதற்கு எனது வழக்கறிஞரிடம் கூறினேனா என்றால், அதைப்பற்றி தெரியாது, அதனால் நான் சொல்லவில்லை. மேற்படி விவரங்கள் எனது முதல்விசாரணை வாக்குமூலத்திலும் கூறப்படவில்லை என்றால், சரியல்ல.

10. குற்றம் சுமத்தப்பட்ட நபர் என்னிடம் எந்த பணமும் வாங்கவில்லை என்றாலும், அதனை கொடுக்கும் அளவுக்கு என்னிடம் நிதிநிலைமை இல்லை என்றாலும், சரியல்ல. 2015–2016 காலக்கட்டத்தில் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் கல்வி நிறுவனத்திற்கு செல்லும் போது அங்கு அவர் அலுவலக தேவைக்காக வைத்திருந்த காசோலையை திருடி பலவருடங்கள் கழித்து இவ்வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

11. நான் எனது பட்டியல் சாட்சியாக குறிப்பிட்டுள்ள சிட்டி யூனியன் வங்கி கிளை மேலாளரை சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேன் என்றால், தயாராக உள்ளேன். குற்றம் சுமத்தப்பட்ட நபர் என்னிடம் கடன் வாங்க இல்லை என்றாலும், அவரது அலுவலகத்தில் இருந்து திருடிய காசோலையை வைத்து பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,<br>
விரைவு நீதிமன்றம்,<br>
இரணியல்.